செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
“மொழிகள் பல; உணர்வு ஒன்றே”

# தேசியக் கருத்தரங்கம் – 3

நாள்: 04.11.2023

**(07.12.2023 - 08.12.2023)**

## இரட்டைக்காப்பியங்கள்: உரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள்

The Twin Epics – (Cilappatikāram, Maṇimēkalai) : Commentaries, Critiques, Translations

### அறிவிப்பும் அழைப்பும்

கற்பனைவளம், சிந்தனைத்திறன், சுவைஉணர்வு, இலக்கியநயம் ஆகியவை மிக்க ஓர் உன்னதப் படைப்பு காப்பியமாகும். இவ்விரு காப்பியங்களும் தமிழ்நாட்டைக் கதைக்களமாகக் கொண்டவையாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியன ஐம்பெரும் காப்பியங்களாகும். இதில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும். மணிமேகலையின் கதைக்களன், கதைமாந்தர், கதை நடக்கும் காலம் ஆகியவை சிலப்பதிகாரத்தை ஒத்து இருப்பதால் மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

சிலம்பு - அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது சிலப்பதிகாரம். சிலம்பு காரணமாக விளைந்த கதையானதால் சிலப்பதிகாரம் ஆயிற்று. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் காப்பியங்களுக்கான இலக்கண அமைப்பு அனைத்தும் பொருந்திவரும்படி இயற்றப்பட்ட காப்பியமாகும். சிலப்பதிகாரத்தின் கதை மாந்தர்களாகக் கண்ணகி, கோவலன், மாதவி போன்றோர் சிறப்பிடம் பெறுகின்றனர். அக்காலத் தமிழ்மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன. தமிழறிஞர்களால் மிகுதியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல் இதுவேயாகும்.

சிலப்பதிகாரத்திற்கு அடுத்ததாக இலக்கிய அழகில் பெருமை வாய்ந்தது மணிமேகலை ஆகும். மணிமேகலை காப்பியத்தின் காலம் தொடர்பாக முரண்பட்ட கருத்துகள் உள்ளன. இக்காப்பியத்தின் தலைவியான மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் கோவலன், மாதவி என்பவர்களின் மகளாவாள்.

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் என்ற சிறப்பை சிலப்பதிகாரம் பெறுகின்றது. பாவின் வளர்ச்சிக்கு வித்திட்ட நூல் சிலப்பதிகாரம் ‘நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்’ என பாரதியார் கூறுகிறார். இரட்டைக் காப்பியத்துள் கிளைக்கதைகள் மிகுந்த நூல் மணிமேகலை ஆகும். மனித வாழ்வு செம்மை அடைவதற்காக அறநெறிகளை அடிப்படையாகக்கொண்டு பாடப்பட்டதே மணிமேகலைக் காப்பியமாகும்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை, முப்பது காதைகளில் 4861 அகவல் அடிகளில் மணிமேகலை என்னும் பௌத்தப் பெண் துறவியின் கதையைச் சொல்லும் இலக்கியமாகும். இளங்கோவடிகளால் சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்ட கண்ணகியின் வரலாற்றை இது தொடர்ந்து எடுத்துரைக்கின்றது. சிலப்பதிகாரத்தின் இறுதியில் கண்ணகி விண்ணுலகிற்குச் செல்கிறாள்; நடன மங்கையான மாதவி தன் மகள் மணிமேகலையுடன் பௌத்த

சமயத்தைத் தழுவுகிறாள். இதிலிருந்து மணிமேகலையின் வாழ்க்கையைக் கூறும் மணிமேகலைக் காப்பியம் அவள் சிறுவயதிலேயே துறவு மேற்கொள்வதோடு முடிகிறது. பாலி, சமஸ்கிருதம், தமிழ் மற்றும் பிற இந்திய மொழிகளில் இருந்த பௌத்த சமய நூல்கள் பல அழிக்கப்பட்ட போதிலும் சாத்தனாரின் காப்பியம் அவ்அழிவிலிருந்து தப்பியது அதன் பெருமைக்குச் சான்றாகும்.

சாத்தனார் இறுதி மூன்று காதைகளில் பௌத்த சமயக் கொள்கைகளை அழகிய கவிதை நடையில் எடுத்துரைக்கக் காணலாம். சமயப் பரப்புரை நூல் என்ற முறையிலும் அது பெற்ற வெற்றி குறிப்பிடற்குரியது. இயற்கைக்காட்சிகளை வருணிப்பதிலும் ஏற்ற உவமைகள், உருவகங்கள், காட்சியுருக்களைக் கையாளுவதிலும், அவர் வல்லவர் என்பதை நூல் முற்றிலும் காணலாம்.

இக்காப்பியமானது ‘உணவிடும் உன்னதப் பணியினை’ கூறுகின்றது. திருவள்ளுவரை ‘பொய்யில் புலவன்’ எனவும் திருக்குறளைப் ‘பொருளுறை’ என்றும் முதலில் கூறிய காப்பியம் இது.

அவ்வகையில் ஆய்வு மாணவர்களுக்கும், இளம் தலைமுறையினருக்கும் இரட்டைக் காப்பியங்கள் பற்றிய முழுமையான ஆய்வுச் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் இரட்டைக் காப்பியங்களின் உரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் எனும் பொருண்மையில் இரண்டு நாள்கள் கருத்தரங்கினைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழிபெயர்ப்பியல் புலம் நடத்தவிருக்கிறது. அவ்வகையில் இவ்விரண்டு நாள் கருத்தரங்கில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையின் - உரைகள், திறனாய்வுச் சிந்தனைகள், மொழிபெயர்ப்புகள் எனும் நோக்கிலும், இம்மொழிபெயர்ப்புகளின் நிறைகளையும் குறைகளையும் சீர்தூக்கிப்பார்க்கும் நோக்கிலும், இவற்றை ஆய்வு மாணவர்களுக்கு அறிமுகம் செய்யவும் இக்கருத்தரங்கம் நடத்தப்பெறுகிறது. சிறந்த ஆய்வு அறிஞர்கள் இக்கருத்தரங்கில் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

கருத்தரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் கீழ்வருமாறு:

1. கருத்தரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 25.
2. கருத்தரங்கு நடைபெறும் நாள்கள்: 07.12.2023 முதல் 08.12.2023 வரை (2 நாள்கள்).
3. கருத்தரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன்கீழ் தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopt@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இக்கருத்தரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
12. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய இறுதி நாள்: 30.11.2023 இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
13. இக்கருத்தரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 01.12.2023 அன்று மின்னஞ்சல் வாயிலாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
“மொழிகள் பல; உணர்வு ஒன்றே”

# தேசியக் கருத்தரங்கம் -03
## National Seminar
### அறிவிப்பும் அழைப்பும்

**இரட்டைக்காப்பியங்கள்: உரைகள், திறனாய்வுக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள்**

**The Twin Epics – (Cilappatikāram, Maṇimēkalai) Commentaries,Critiques,Translations**

**(07.12.2023 – 08.12.2023)**

**விண்ணப்பப் படிவம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் / Name | தமிழ் | | | | | நிழற்படம்/ Photo |
| | | English | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது Date of Birth/ Age | | | | | | |
| 3. | பாலினம் / Gender (✓) | ஆண்/ Male | | பெண்/ Female | | திருநங்கை/ Transgender | |
| 4. | வகுப்பு /Class (✓) | பொது/ General | | இ.பி.வ. / OBC | | பட்டியல் இனம் / SC/ ST | |
| 5. | கல்வித் தகுதி / Educational Qualification | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு / Date of Joining & year in M. Phil & Ph.D. | முழுநேரம் | | | | | |
| | | பகுதிநேரம் | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு / M. Phil & Ph.D. Research Topic | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்) University / College/Institute Address (Contact Number & Email) | | | | | | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண் / Residential address & Contact number | | | | | | |
| 10 | புலன எண் / WhatsApp Number | | | | | | |

| | | |
|---|---|---|
| 11 | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக / Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் / Yes<br>இல்லை / No |
| | | |

**(கையொப்பம்)**

**நெறியாளர் /துறைத் தலைவர்/**

**முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்**

**இடம்:**

**நாள்:**